**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் விகாரி வருடம் தமிழ் மாதம் ஆவணி–18–ஆம் நாள் ஆங்கில வருடம் 2019 செப்டம்பர் 04 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றபொருள்:1**

**ந.க.எண்.1358/2019/பி1**

காங்கேயம் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்கள், குடிநீர் கட்டணம் ஆகியவற்றை தற்பொழுது மாறிவரும் சூழலுக்கேற்ப ஆன்லைன் மூலம் கார்டுகள் / இணைய வழி பணம் பெறவும் மேலும், பொது மக்கள் வசதிக்கேற்ப வசூல் பணிகளை பொதுமக்கள் இருக்கும் இடத்தில் இருந்து செலுத்த வசதியாக மொபைல் வழி இரசீது வழங்கும் கருவி மூலம் செயல்படுத்தவும் பொதுமக்களின் நலன் கருதி ஏற்பாடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், இப்பணியினை மேற்கொள்ள மேலாளர், HDFC வங்கி அவர்களின் கடிதத்தில் இப்பணிக்கு தேவையான உபகாரணங்கள், இணைய வசதி மற்றும் சேவை கட்டணங்களை HDFC வங்கி இலவசமாக வழங்க உள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

எனவே, வரி மற்றும் வரியில்லா இனங்கள் மற்றும் இதர கட்டணங்கள் செலுத்த நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னையில் உள்ள கணினி பிரிவு மூலம் சர்வரை Link செய்யவும், இவற்றை உபயோகித்து ஆன்லைன் மற்றும் ஆப் லைன் பண பரிவர்த்தனைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி மற்றும் இதனை மேற்கொள்ள ஏதுவாக வருவாய் மற்றும் குடிநீர் நிதி குறித்த வங்கி கணக்குகள் ஆணையாளர், காங்கயம் நகராட்சி என்ற பெயரில் துவக்கி கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1. பொதுமக்கள் வரி மற்றும் கட்டணங்களை எளிதாக செலுத்த ஏதுவாக இருக்கும் என்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.
2. புதிய வங்கி கணக்குகள் தொடங்கி பராமரிக்கவும், மேற்படி பணியினை இலவசமாக செய்து தர HDFC வங்கிக்கு அனுமதி வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையராக தகவல் தொழில்நட்ப (I.T Department) பிரிவு அலுவலரை தொடர்பு கொண்டு உரிய அறிவுரை பெற்று சம்பந்தப்பட்ட வங்கி மூலம் பணியினை செய்திட அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1323 . நாள்.04.09.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:2**

**கோப்பு எண் : 1162/2019 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP 2019-20) **2019–2020** ன் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:

17349/2019/இ3 நாள்:03.09.2019 ஆம் தேதியிட்ட கடிதத்தில், தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி/ நில அபிவிருத்திக் கட்டணம் (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| காங்கயம் | 5.00 | 1.75 | 2.25 | 1.00 |

எனவே மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.3 சிவன் நகர் முதல் தொட்டியபட்டி ரோடு, வார்டு எண்.4 வெங்கு நகர் மற்றும் வார்டு எண்.9 வேதா நகர் பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 2.415 | 4.50 & 5.50 | 200.00 |
| 2 | வார்டு எண்.1 ஏ.சி நகர், நாச்சிமுத்து கல்யாண மண்டபம் ரோடு, திருப்பூர் ரோடு செர்ரி கம்பெனி ரோடு, வார்டு எண்.3 சிவன் நகர், வார்டு எண்.7 சோழன் நகர், வார்டு எண்.8 கே.எஸ்.ஆர் வீதி, வார்டு எண்.9 மாருதி நகர், வார்டு எண்.10 பங்களாபுதூர் ரோடு, கோவை ரோடு ஏ.சி நகர், வார்டு எண்.13 கோவை ரோடு மற்றும் வார்டு எண்.18 சௌடாம்பிகை நகர் பகுதிகளில் தார்சாலையை சீரமைத்தல் | 5.700 | 4.50 & 4.00 | 200.00 |
| 3 | வார்டு எண்.3 தொட்டியபட்டி முதல் வரதப்பம்பாளையம் ரோடு, வார்டு எண்.10 சேரன் நகர் மற்றும் சக்தி நகர் பகுதிகளில் தார்சாலையை சீரமைத்தல் | 1.990 | 4.50 | 100.00 |
| | **மொத்தம்** | | | **500.00** |

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1324 . நாள்.04.09.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:3**

**ந.க.எண். 172 /2019/எப்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சென்னிமலை ரோடு ரீ.சர்வே எண்.353/3B2 என்ற பகுதியில் 1.58 1/2 ஏக்கர் மனைப்பிரிவு அனுமதி கோரியது சேலம் நகர் ஊரமைப்பு துறை, துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.19331/2018/சே.ம.3, நாள்.04.06.2019–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் காங்கயம் நகராட்சிக்கும் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய மின் பகிர்மான இடத்தை கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பல்லடம் அவர்களுக்கு ஒப்படைக்கவும் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு நல்ல முறையில் தரமாக அமைக்கப்பட்டதற்கு பொறியாளர் சான்று வழங்கவும் அறிவுறுத்தப்பட்டதில், இந்நகராட்சி பொறியாளர் குறிப்பில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளதாகவும் மேலும் அடிப்படை வசதிகள், மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டதாகவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.1.20,000/–ஐ இந்நகராட்சி கரூவூலத்தில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி மனைப்பிரில் சேலம் நகர் ஊரமைப்புத்துறையில் மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் வழங்க உத்தேச வரைபடத்தில் மனைப்பிரிவு சாலைகளின் மொத்த பரப்பு 1343.49 சதுர மீட்டர் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 54.25 சதுர மீட்டர் இடத்தை நகராட்சிக்கு தானமாக பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு 1343.49 சதுர மீட்டர் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 54.25 ச.மீ இடத்தை தானமாக பெற மன்றம் ஏற்கலாம்.
2. மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாக பெற்றதில் நகராட்சிக்கு உட்பிரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. தெரு விளக்குகள் அமைக்க ரூ.120000/–ஐ இந்நகராட்சி கரூவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1325 . நாள்.04.09.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:4**

**ந.க.எண்.172/2019/எப்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 தொட்டிபட்டி சாலை ரீ.சர்வே எண்.238/4A1, 238/4A2, 238/4B என்ற பகுதியில் **1.14** ஏக்கர் மனைப்பிரிவு அனுமதி கோரியது உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.97/2019/தி.ம.1, நாள்.03.06.2019–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் காங்கயம் நகராட்சிக்கும் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய மின் பகிர்மான இடத்தை கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பல்லடம் அவர்களுக்கு ஒப்படைக்கவும் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு நல்ல முறையில் தரமாக அமைக்கப்பட்டதற்கு பொறியாளர் சான்று வழங்கவும் அறிவுறுத்தப்பட்டதில், இந்நகராட்சி பொறியாளர் குறிப்பில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளதாகவும் மேலும் அடிப்படை வசதிகள், மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டதாகவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.1.00,000/–ஐ இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி மனைப்பிரில் சேலம் நகர் ஊரமைப்புத்துறையில் மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் வழங்க உத்தேச வரைபடத்தில் மனைப்பிரிவு சாலைகளின் மொத்த பரப்பு 1280.74 சதுர மீட்டர் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 24.61 சதுர மீட்டர் இடத்தை நகராட்சிக்கு தானமாக பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு 1280.74 சதுர மீட்டர் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 24.61 ச.மீ இடத்தை தானமாக பெற மன்றம் ஏற்கலாம்.
2. மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாக பெற்றதில் நகராட்சிக்கு உட்பிரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. தெரு விளக்குகள் அமைக்க ரூ.100000/–ஐ இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1326 . நாள்.04.09.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**மன்றபொருள்:5**

**ந.க.எண்.605/2019/எப்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட ரீ.சர்வே எண்.760/3B, 760/4A, என்ற பகுதியில் 0.54 1/2 ஏக்கர் மனைப்பிரிவு அனுமதி கோரியது திருப்பூர் நகர் ஊரமைப்பு துறை, உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.533/2019/தி.ம.1, நாள்.12.07.2019–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் காங்கயம் நகராட்சிக்கும் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய மின் பகிர்மான இடத்தை கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பல்லடம் அவர்களுக்கு ஒப்படைக்கவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மேற்படி மனைப்பிரிவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு நல்ல முறையில் தரமாக அமைக்கப்பட்டதற்கு பொறியாளர் சான்று வழங்கவும் அறிவுறுத்தப்பட்டதில், இந்நகராட்சி பொறியாளர் குறிப்பில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளதாகவும் மேலும் அடிப்படை வசதிகள், மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டதாகவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.40,000/- ஐ இந்நகராட்சி கரூவூலத்தில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி மனைப்பிரிவில் திருப்பூர்நகர் ஊரமைப்புத்துறையில் மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் வழங்க உத்தேச வரைபடத்தில் மனைப்பிரிவு சாலைகளில் மொத்த பரப்பு **273.34** சதுர மீட்டர் இடத்தையும் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு **23.92** சதுர மீட்டர் இடத்தையும் நகராட்சிக்கு தானமாக பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு 273.34 சதுர மீட்டர் மற்றும் மனைப்பிரில் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 23.92 ச.மீ இடத்தை தானமாக பெற மன்றம் ஏற்கலாம்.
2. மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாக பெற்றதில் நகராட்சிக்கு உட்பிரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. தெரு விளக்குகள் அமைக்க ரூ.40000/—ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1327 . நாள்.04.09.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது